2026 ஜூலை மாதம் 15– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 142/2025

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.டீ.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 (LW1) – முத்துராசு |
| தகப்பனார் பெயர்: | தொத்தையா |
| ஊர்: | குண்டல்நாயக்கன்பட்டி |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | தலைமை காவலர், பழனிசெட்டிபட்டி காவல்நிலையம் |
| வயது : | 48 |

15.07.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் பழனிசெட்டிபட்டி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சம்பவத்தின்போது நான் போடிநாயக்கனூர் தாலுகா காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 21.08.2023 ம் தேதி 15.15 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு.முருகானந்தம் மற்றும் என்னுடன் பணிபுரிந்த முதல்நிலை காவலர் எண்.251 திரு.முத்துச்செல்வம் ஆகியோர்கள் சேர்ந்து குற்றத்தடுப்பு சம்பந்தமாக போடி தாலுகா காவல்நிலைய சரகத்திற்குள் ரோந்து செய்து வந்தபோது, போடி அணைக்கரைப்பட்டி விலக்கு அருகில் சென்று

கொண்டிருந்தபோது, பின்னர் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த போடியை சேர்ந்த குறும்பத்தேவர் மகன் சடையன் என்பவர் எங்களை கண்டு, ஓட முயற்சித்தவரை பிடித்து அவரது கையில் வைத்திருந்த பையை சோதனையிட்ட போது, அதில் வெடிமருந்து அடங்கிய டப்பாக்கள் இருந்தன.

2. அது சம்பந்தமாக சார்பு ஆய்வாளர் விசாரித்த போது, பையில் இருந்தவைகள் வெடிக்கக்கூடிய பொருட்கள் என்பது தெரிந்தும், அதனால் மனித உயிர்களுக்கு சேதம் ஏற்படும் என்பது தெரிந்தும், உரிமம் எதுவும் இல்லாமல் வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார். பின்னர் அதை குறித்து சார்பு ஆய்வாளர் எதிரி சடையனை விசாரித்த போது, பன்றிகளை வேட்டையாடுவதற்காக போடி, அணைக்கரைப்பட்டியை சேர்ந்த அன்னஞ்சித்தேவர் மகன் ராமு என்ற ரமேஷிடமிருந்து வாங்கி வந்ததாக சார்பு ஆய்வாளரிடம் 1 வது எதிரி சடையன் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்.

3. சடையன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சார்பு ஆய்வாளர் 15.30 முதல் 16.30 மணிவரை பதிவு செய்தார். மொத்தம் 11 டப்பாக்கள் பையில் இருந்தன. அந்த 11 டப்பாக்களை என் முன்னிலையும், முதல்நிலை காவலர் முத்துச்செல்வம் முன்னிலையில் 16.45 மணிக்கு அத்தாட்சியில் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார். பின்பு சார்பு ஆய்வாளரிடம் 1 வது எதிரி சடையன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி 2 வது எதிரி ராமு (எ) ரமேஷ் என்பவர் இருக்கும் இடம் எனக்கு தெரியும் என்று கூறினார். பின்னர் போடி, அணைக்கரைப்பட்டிக்கு நான், சார்பு ஆய்வாளர், முதல்நிலை காவலர் முத்துச்செல்வம், 1 வது எதிரி சடையன் ஆகியோர்கள் சென்றோம்.

4. அணைக்கரைப்பட்டி, கட்டைப்பாலம் அருகில் ஆஜர் 2 வது எதிரி ராமு (எ) ரமேஷை 1 வது எதிரி சடையன் அடையாளம் காட்ட சார்பு ஆய்வாளர் 2 வது எதிரியை 17.15 மணிக்கு கைது செய்து, எதிரிகளை கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் 17.30 மணிக்கு போடி தாலுகா காவல்நிலையத்திற்கு வந்து,

சார்பு ஆய்வாளர் அவர்கள் காவல்நிலைய குற்ற எண்.269/2023 பிரிவுகள் 4(b) E.S., Act & 296 I.P.C.,–ன்படி வழக்கு பதிவு செய்தார். சாட்சி மீண்டும் பிரிவு 286 I.PC.,–ன்படி வழக்கு பதிவு செய்ததாக கூறுகிறார். 1வது எதிரி சடையன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நானும், என்னுடன் இருந்த முதல்நிலை காவலர் முத்துச்செல்வம் ஆகியோர்கள் கையொப்பம் செய்தோம்.

5. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வெடிமருந்து பொருட்கள் நாங்கள் கைப்பற்றியவைகள் தான். அது **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்கு குறுக்கு விசாரணை செய்ய போதிய காவலஅவகாசம் வழங்கியும், குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

**மறு விசாரணை** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 15.07.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.15 15:35:26 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
15.07.2026